# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## நான்காம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2017/2018 (ஆகஸ்ட் 2020)

## SAS 4133 விமர்சனவியற் கோட்பாடு
## Critical Theory

**நேரம் : 03 மணித்தியாலங்கள்**

**பகுதி – I இல் இருந்து இரண்டு வினாக்களுக்கும் பகுதி – II இல் இருந்து மூன்று வினாக்களுக்கும் மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

### பகுதி – I

01. (அ) விமர்சனவியற் கோட்பாட்டை வரைவிலக்கணப்படுத்தி விளக்குக.
(10 புள்ளிகள்)

(ஆ) விமர்சனவியல் கோட்பாட்டின் தோற்றத்திற்கான காரணங்களைக் குறிப்பிட்டு விளக்குக.
(10 புள்ளிகள்)

02. (அ) மரபான கோட்பாடு – விமர்சனக் கோட்பாடு இரண்டுக்குமான வேறுபாடுகளைத் தருக.
(10 புள்ளிகள்)

(ஆ) அதோர்னோ (Adorno) குறிப்பிடும் முழுமை என்பது உண்மையல்ல (The whole is untrue) தெளிவுபடுத்துக.
(10 புள்ளிகள்)

03. (அ) அன்னியமாதல் (Alienation) பற்றிய மாக்சின் கருத்துக்களை தருக.
(10 புள்ளிகள்)

(ஆ) அறிவொளி (Enlightment) பற்றிய பிராங்பேட் பள்ளியினர் கருத்துக்களையும் விமர்சனங்களையும் சுருக்கமாக தருக.
(10 புள்ளிகள்)

### பகுதி – II

04. அறிவு தன்னுணர்வு இல்லாமல் போன நிலையை அதோர்னோ மற்றும் ஹோர்கைமர் எவ்வாறு குறிப்பிடுகின்றனர் என்பதை ஆதாரபூர்வமாக நியாயப்படுத்துக.
(20 புள்ளிகள்)

05. பண்பாட்டுத் தொழிலமைப்பு (Culture Industry) எனும் கருத்தாக்கத்தை சுருக்கமாக விளக்கி பண்பாட்டுச் சந்தை பற்றிய அதோர்னோவின் கருத்துக்களை ஆராய்க.
(20 புள்ளிகள்)

06. வாழ்வுணர்வும் நாகரீகமும் (Eros and Civilization) எனும் நூலில் கெர்பர்ட் மாகுயுசே (Herbert Marcuse) முன்வைக்கும் உணர்வுகளை தெளிவுபடுத்தி மானுட குலத்திற்கு தேவையானது எது என்பதனை சிறந்த எடுத்துக்காட்டுகளின் துணையுடன் ஆராய்க.
(20 புள்ளிகள்)

07. கேபர்மாஸ் (Herbermas) முன்வைக்கும் அறிவின் வகைப்பாடுகளையும், உகந்த பேச்சுச் சூழல், பொதுக்களம் என்பன பற்றிய உமது புரிதலையும் அடிப்படையாகக் கொண்டு இவர் மற்றய விமர்சனக் கோட்பாட்டாளர்களிலிருந்து வேறுபடுமாற்றினை ஆராய்க.
(20 புள்ளிகள்)

*****